# சிங்கப்பூர் தமிழ் சொல்வேந்தர் மன்றம்

# (Singapore Tamil Toastmasters Club)

**அறிவில் உதித்த அரும்பெருங் கருத்தை**
**அருந்தமிழ் மொழியில் அவையில் படைத்துத்**
**தானும் உயர தமிழும் உயர**
**உதவும் மன்றம் தோஸ்ட்மாஸ்டர்ஸ்.**

அனைத்துலக சொல்வேந்தர் மன்றம் 1924ம் ஆண்டில், ரால்ப் ஸ்மெட்லியால் துவங்கப்பட்டது. தற்போது, 70 நாடுகளில் 10,000 மன்றங்கள் அமைந்துள்ளன. இவற்றில் 200,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். **சிங்கப்பூர் தமிழ் சொல்வேந்தர் மன்றம்தான்** உலகில் தொடங்கப்பட்ட முதல் தமிழ் சொல்வேந்தர் மன்றம்.

**"தமிழோடு இயைந்த தனிமனித மேம்பாடு"** என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு, **சிந்தனை ஆற்றல், கருத்தாற்றல், பேச்சாற்றல்** மற்றும் **ஆளுமைத்திறனை** மேம்படுத்தும் நோக்கோடு இம்மன்றம் செயல்பட்டுவருகிறது. சுமார் 25க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு இரண்டு ஆண்டுகளாக ராடின் மாஸ் இந்திய சமூக நற்பணிக்குழுவின் உறுதுணையோடு, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவோடும் சிறப்பாக செயல்பட்டுவருகிறது. உலகின் முதல் தமிழ் Competent Toastmaster (CTM)-களை உருவாக்கிய பெருமை இந்த மன்றத்திற்கு உள்ளது.

சிங்கப்பூர் தமிழ் சொல்வேந்தர் மன்றம் பிரதி மாதம் மூன்றாவது சனிக்கிழமைகளில், மன்றக் கூட்டங்களை ராடின் மாஸ் சமூக மன்றத்தில் நடத்தி வருகிறது. மன்றக்கூட்டங்களில் அரங்கத் தலைப்புகள், தயாரிக்கப்பட்ட ஒப்படைப்புகள் என இரு அங்கங்கள் நடைபெறுகின்றன.

- தயாரிப்பு இல்லாமல், கொடுக்கப்படும் தலைப்பையொட்டி பேசுதல், “அரங்கத் தலைப்புகள்” அங்கத்தில் இடம் பெறுகிறது.
- தயாரிக்கப்பட்ட ஒப்படைப்புகளின் அங்கத்தில், மூன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பேசுவார்கள். அனைத்துலக சொல்வேந்தர் மன்றத்தின் தொடர்பு மற்றும் தலைமைத்துவ பயிற்சி நூல்களின் உதவியுடன் படைக்கப்படும் இவ்வுரைகளின் மூலம் உரை அமைப்பு, குரல் வலிமை, மொழி வளம், அங்க அசைவுகள் போன்ற பேச்சாற்றலை வளர்க்கும் திறன்களை கற்றுக்கொள்ளலாம்.
- தயாரித்த உரையை படைத்த பேச்சாளருக்கு, அவருடைய குறை நிறைகளை பக்குவமாக எடுத்துரைக்க மதிப்பீட்டாளர் நியமிக்கப்படுவார்.
- பத்து ஒப்படைப்புகளை நிறைவுசெய்யும் போது, நீங்கள் Competent Toastmaster என்ற சான்றிதழை பெறுவீர்கள்.

**நண்பர்களே! தன்னம்பிக்கையுடன் தமிழில் சிறந்த பேச்சாளராக வேண்டுமா சொல்வேந்தர் மன்றத்தில் சேருங்கள்.**

<u>மேலும் விபரங்களுக்கு,</u>
பால. தியானேஸ்வரன். (91501480)
உபதலைவர் - உறுப்பினர் சேர்க்கை:
மின்னஞ்சல் முகவரி : "tamiltoastmasters@yahoo.com.sg".